# திருப்பூர் மாநகராட்சி

**2018 பிப்ரவரி மாதம் 20–ந் தேதி நடைபெற்ற மாமன்றக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்**

**203 முதல் 206 வரை**

**23–02–2018–ந் தேதி நடைபெற்ற மாமன்றக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்**

**207 முதல் 215 வரை**

**திருப்பூர் மாநகராட்சி**

**2018ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் ஆம் தேதி 20 செவ்வாய்க்கிழமை மாலை 4.30 மணிக்கு மாநகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற மாமன்றக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்.**

**முன்னிலை : திரு மா. அசோகன் எம்.எஸ்.சி.,**
**தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர்,**
**திருப்பூர் மாநகராட்சி.**

*****

**203)** 1. Placed that the Tiruppur City Municipal Corporation is authorizing the Commissioner to borrow the GOI and GoTN grant of Rs.105.584 Lakhs under the Atal Mission for Scheme for the following project as per the terms and conditions prescribed by TUFIDCO.

| Name of the project / Scheme No. | Approved Cost | GOI Share (50%) | GoTN Share (20%) | ULB Share (30%) |
|---|---|---|---|---|
| 1) Improvement of KMG Nagar park in Ward No.50 | 80.102 | 75.417 | 30.167 | 45.250 |
| 2) Improvement of KM Siva subramaniyam Nagar in Ward No.52 | 70.732 | | | |
| Total | 150.834 | | | |

2. Placed that the Tiruppur City Municipal Corporation Agrees the terms and Conditions Mentioned in the sanction letter and agrees to execute the Project as per the AMRUT guidelines.
3. Further placed that the Council of Tiruppur City Municipal Corporation will take necessary steps for implement / maintenance of the parks through PPP Mode.

Subjects placed before the council for approval.

**Office Note :** Subject may be approved. ( E.1 /3097 / 2017 )

- - - - -

**RESOLUTION : OFFICE NOTE APPROVED.**

- - - - -

**204)** திருப்பூர் மாநகராட்சியில் தற்போது உள்ள வார்டுகளை மறு வரையறை செய்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் ஒப்புதல் பெற்று அனுப்புமாறு மாநில வார்டு எல்லை வரையறை ஆணைய உறுப்பினர் செயலாளர் அவர்களின் கடிதம் ந.க.எண்.3174/2017/EG, நாள் 19–10–2017ல் தெரிவிக்கப்பட்டது. அதன்படி திருப்பூர் மாநகராட்சியின் 60 வார்டு எல்லைகளையும் மறுவரையறை செய்யப்பட்டு 27–12–2017 அன்று வெளியிடப்பட்டது.

அரசியல் கட்சியினர் மற்றும் பொது மக்களிடமிருந்து பெறப்பட்ட ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபணைகளை பரிசீலனை செய்து தேவையிருப்பின் வரைவு கருத்துருவில் திருத்தங்கள் மேற்கொண்டு இறுதி வரையறை பட்டியல் தயார் செய்யப்பட்டு இறுதி அறிக்கை அனுப்புமாறு மாநில வார்டு எல்லை வரையறை ஆணைய உறுப்பினர் செயலாளர் அவர்களின் கடிதம் ந.க.எண். 3174/2017/EG1-1, நாள் 31-1-2018 ஆம் தேதிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி வழிமுறைகளின்படி தயார் செய்யப்பட்ட இறுதி வரைவு மறு வரையறை கருத்துருவை " மறுவரையறை ஆணையத்திற்கு " அனுப்ப மாமன்ற ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மாமன்றம் ஒப்புதல் அளிக்கலாம். ( சி.3 / 2698 / 2017 )

– – – –

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**205)** தமிழ்நாடு நகர்ப்புற சாலை அபிவிருத்தி திட்டம் (TURIP) 2017-18-ன் கீழ் ரூ.10.00 கோடி மதிப்பீட்டில் திருப்பூர் மாநகராட்சி பகுதிகளில் பாதாள சாக்கடை குழாய் அமைத்தல், குடிநீர் குழாய் அமைத்தல் மற்றும் இயற்கை சீற்றங்களால் சேதமடைந்த சாலைகளை சீரமைக்க நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறைகள் ஆணை ந.க.எண்.21422/2017/E3, நாள்.03.10.2017 வாயிலாக நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. நிர்வாக அனுமதி பெறப்பட்ட ரூ.10.00 கோடி மதிப்பிட்டிற்கு சாலைப் பணிகள் 2 சிப்பங்களாக தொகுக்கப்பட்டு தலைமைப் பொறியாளர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ஆணை, ந.க.எண்.24545/2017/DO1, நாள்.16.11.2017வாயிலாக தொழில்நுட்பஅனுமதி பெறப்பட்டதையடுத்து,மேற்படி 2பணிகளுக்கும் 08.01.2018 அன்று இரட்டை உறை முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டன.

அதன்படி சிப்பம் எண்.1, வார்டு எண்.1ல் திலகர் நகர் பிரதான சாலையில் மறுதார்தளம் அமைத்தல், வார்டு எண்.2, பட்டத்தரசியம்மன் கோவில் வீதியில் மழைநீர் வடிகால், சிறுபாலம் கட்டுதல் மற்றும் மறுதார்தளம் அமைத்தல், வார்டு எண்.2, அண்ணா நகர் 1வது மற்றும் 2வது குறுக்கு வீதி, பாரதி நகர் 1வது மற்றும் 2வது வீதிகளில் மழைநீர் வடிகால் கட்டுதல் மற்றும் சிமெண்ட் கான்கீரிட் தளம் அமைத்தல், வார்டு எண்.4, சீனிவாசா லேஅவுட் வடக்கு பகுதிகளில் மழைநீர் வடிகால் கட்டுதல் மற்றும் புதிதாக தார்தளம் அமைத்தல், வார்டு எண்.4 மற்றும் 6, கவிதா லட்சுமி நகர் மற்றும் குறுக்கு வீதியில் மழைநீர் வடிகால் கட்டுதல் மற்றும் புதிதாக தார்தளம் அமைத்தல், வார்டு எண்.5, அரசன் நகர் 1வது, 2வது வீதி மற்றும் சௌபாக்கியா நகர் பகுதியில் மறுதார்தளம் அமைத்தல், வார்டு எண்.7, அம்மன் நகர் பகுதியில் மழைநீர் வடிகால், சிறுபாலம் கட்டுதல் மற்றும் மறுதார்தளம் அமைத்தல், வார்டு எண்.7, அவிநாசி கவுண்டம்பாளையம் பகுதியில் மழைநீர் வடிகால், சிறுபாலம் கட்டுதல் மற்றும் மறுதார்தளம் அமைத்தல், வார்டு எண்.10, கற்பக விநாயகர் கோவில் வீதி, வ.ஊ.சி. நகர் மற்றும் ஜீவா காலனி பகுதிகளில் மறுதார்தளம் அமைத்தல், வார்டு எண்.11, செல்லம்மாள் காலனி மற்றும் அறிவொளி நகர் பகுதிகளில் மறுதார்தளம் அமைத்தல், வார்டு எண்.12, ஏ.வி.எம். நகர் பகுதியில் மழைநீர் வடிகால் கட்டுதல் மற்றும் தார்சாலையை மேம்படுத்துதல், வார்டு எண்.13, பாலாஜி மருத்துவமனை சாலை மற்றும் திரு.வி.க. நகர் பகுதியில் மறுதார்தளம் அமைத்தல், வார்டு எண்.14, கீதா நகர் பகுதியில் மறுதார்தளம் அமைத்தல், வார்டு எண்.15, செட்டியார் வீதியில் மழைநீர் வடிகால் மற்றும் சிமெண்ட் கான்கீரிட் தளம் அமைத்தல், வார்டு எண்.16, சௌடாம்பிகை நகர் பகுதியில் மழைநீர் வடிகால் கட்டுதல் மற்றும் தார்தளம் புதுப்பித்தல், வார்டு எண்.17, ஜே.பி. நகர் பிரதான சாலையில் மழைநீர் வடிகால் கட்டுதல் மற்றும் தார்தளம் புதுப்பித்தல், வார்டு எண்.18, ஏ.பி.எஸ். பள்ளி முதல் சமத்துவபுரம் பிரதான சாலை வரை (கணபதி நகர்) மறுதார்தளம் அமைத்தல், வார்டு எண்.19, அம்மன் நகர் EB Office முதல் ஸ்ரீ நகர் நால்ரோடு வரை மழைநீர் வடிகால் கட்டுதல் மற்றும் தார்தளம் புதுப்பித்தல், வார்டு எண்.20, கணபதி நகர் 1வது வீதியில் தார்தளம் புதுப்பித்தல், வார்டு எண்.21, MGR காலனி பிரதான சாலையில் தார்தளம் புதுப்பித்தல், வார்டு எண்.22, மூர்த்தி நகர் 1வது வீதி மற்றும் பவானி நகர் 2வது வீதிகளில் மறுதார்தளம் அமைத்தல், வார்டு எண்.23, NRK புரம் 1வது வீதியில் மறுதார்தளம் அமைத்தல், வார்டு எண்.28, பாரதி நகர் விறகுக்கடை வீதி, டெய்லர் கடை வீதி மற்றும் 3வது வீதிக்கு மழைநீர் வடிகால் கட்டுதல் மற்றும் தார்தளம் புதுப்பித்தல், வார்டு எண்.29, லக்கி நகர் பிரதான சாலை மற்றும் இந்திரா நகர் 1வது வீதியில் தார்தளம் புதுப்பித்தல், வார்டு எண்.30, ராஜா நகர் 4வது வீதியில் மழைநீர் வடிகால் கட்டுதல் மற்றும் தார்தளம் புதுப்பித்தல் பணிக்கு (மதிப்பீட்டுத் தொகை ரூ.5,00,00,000/-) 08.01.2018 அன்று M/s.ஹரி கன்ஸ்ட்ரக்சன்ஸ் மற்றும் M/s.ராஜா கன்ஸ்ட்ரக்சன்ஸ் ஆகிய இரண்டு நிறுவனங்கள் ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கியிருந்தன.

**205–ன் தொடர்ச்சி**

மேற்கண்ட நிறுவனங்களின் தொழில்நுட்ப தகுதிகளுக்கான உறை திறப்பு செய்யப்பட்டு, உள்ளூர் ஒப்பந்தப்புள்ளி முடிவெடுக்கும் குழுவால், மேற்படி நிறுவனங்களின் தொழில்நுட்ப தகுதிகள் பரிசீலனை செய்யப்பட்டது. அதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை அளித்திருந்த இரண்டு ஒப்பந்ததாரர்களும் இப்பணியை செய்ய தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்கள் என உள்ளூர் ஒப்பந்தப்புள்ளி முடிவெடுக்கும் குழுவால் முடிவெடுக்கப்பட்டது. அதன் அடிப்படையில் M/s.ஹரி கன்ஸ்ட்ரக்சன்ஸ் மற்றும் M/s.ராஜா கன்ஸ்ட்ரக்சன்ஸ் ஆகிய இரண்டு நிறுவனங்களின் விலைவிகித ஒப்பந்தப்புள்ளி உறை 01.02.2018 அன்று திறப்பு செய்யப்பட்டு, ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்யப்பட்டதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ. | ஒப்பந்தப்புள்ளி விகிதம் | வைப்புத்தொகை |
|---|---|---|---|---|
| 1. | M/s.ஹரி கன்ஸ்ட்ரக்சன்ஸ் | 4,39,60,461/- | மதிப்பீட்டு விலையை விட 5.50% அதிகம் | இணைக்கப்பட்டுள்ளது |
| 2. | M/s.ராஜா கன்ஸ்ட்ரக்சன்ஸ் | 4,49,38,524/- | மதிப்பீட்டு விலையை விட 7.85% அதிகம் | இணைக்கப்பட்டுள்ளது |

மேற்படி தொழில்நுட்ப தகுதி பெற்ற இரண்டு ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டு விலையை விட அதிகமாக இருந்ததால், மேற்படி 2 ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்திருந்த M/s.ஹரி கன்ஸ்ட்ரக்சன்ஸ் நிறுவனத்திடம் இவ்வலுவலக கடிதம் எண். 314/2017-18/CE (CMA), நாள்: 02.02.2018-ல் தங்களது ஒப்பந்தப்புள்ளியில் விலைக்குறைப்பு செய்து தர கோரப்பட்டது. மேற்படி நிறுவனம் தங்களது 07.02.2018-ம் தேதிய கடிதத்தில், இனம் எண்.6-ல் ரூ.6600-க்கு பதிலாக ரூ.6555-க்கும், இனம் எண்.7-ல் ரூ.6700-க்கு பதிலாக ரூ.6650-க்கும், இனம் எண்.11-ல் ரூ.500-க்கு பதிலாக ரூ.495-க்கும் மற்றும் இனம் எண்.21-ல் ரூ.4700-க்கு பதிலாக ரூ.4640-க்கும் விலைக்குறைப்பு செய்து தர சம்மதம் தெரிவித்துள்ளது. மேற்படி விலைக்குறைப்பு கடிதம் பெறப்பட்ட பின் மீண்டும் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ. | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|
| 1. | M/s.ஹரி கன்ஸ்ட்ரக்சன்ஸ் (விலைக்குறைப்புக்கு பின்) | 4,37,44,117/- | மதிப்பீட்டு விலையை விட 4.98% அதிகம் |

விலைக்குறைப்புக்கு பின் மதிப்பீட்டு விலையை விட 4.98% அதிகமாக இருந்த மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஏற்றுக்கொள்ளலாம் என உள்ளூர் ஒப்பந்தப்புள்ளி முடிவெடுக்கும் குழு கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளதையடுத்து, மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஏற்பது குறித்து மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மேற்படி பணி திட்டப்பணியாக உள்ளதால் விரைவில் பணியை முடித்து முடிவறிக்கை சமர்ப்பிக்க வேண்டியுள்ளதாலும், திருப்பூர் மாநகரம் தொழில் நகரமாக உள்ளதால் திருப்பூர் மாநகரில் கட்டுமானப் பொருள்களின் விலை மற்றும் தொழிலாளர்கள் கூலி போன்றவை செந்தூரப்பட்டியல் விலை விகிதத்தை விட கூடுதலாகவும், மற்ற நகரங்களை காட்டிலும் கூடுதலாகவும் உள்ள காரணத்தாலும், விலைக்குறைப்புக்கு பின் மதிப்பீட்டு விலையை விட 4.98% அதிகமாக உள்ள மேற்படி ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் ஏற்கலாம்.

**ம.எண். 314/2017-18/CE(CMA)**

- - - -

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

– – – – –

**206)** இயக்குதல் மற்றும் பராமரித்தல் இடைவெளி நிரப்பு நிதி (OMGFF) 2013-14-ன் கீழ் திருப்பூர் மாநகராட்சி, வார்டு எண்.20, நஞ்சப்பா நகர் பகுதியில் புதிதாக மண்டல அலுவலக கட்டிடம் கட்ட ரூ.260.00 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின் செயல்முறைகள் ஆணை ந.க.எண்.20468/2017/E1, நாள்.18.09.2017-ன் வாயிலாக நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பணியின் மதிப்பிட்டிற்கு தலைமைப் பொறியாளர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ஆணை ந.க.எண். 23298/2017/DO1, நாள்.30.11.2017-ன் வாயிலாக தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டதை தொடர்ந்து, 23.01.2018 அன்று இரட்டை உறை முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டன. அதன்படி 23.01.2018 அன்று மேற்படி பணிக்கு M/s.ஸ்ரீ சாயி அசோசியேட்ஸ் மற்றும் M/s. எஸ்.பி. அன் கோ., ஆகிய இரண்டு நிறுவனங்கள் ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கியிருந்தன.

மேற்கண்ட நிறுவனங்களின் தொழில்நுட்ப தகுதிகளுக்கான உறை திறப்பு செய்யப்பட்டு, உள்ளூர் ஒப்பந்தப்புள்ளி முடிவெடுக்கும் குழுவால், மேற்படி நிறுவனங்களின் தொழில்நுட்ப தகுதிகள் பரிசீலனை செய்யப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை அளித்திருந்த இரண்டு நிறுவனங்களும் இப்பணியை செய்ய தகுதி வாய்ந்தவை என உள்ளூர் ஒப்பந்தப்புள்ளி முடிவெடுக்கும் குழுவால் முடிவெடுக்கப்பட்டது. அதன் அடிப்படையில் M/s. ஸ்ரீ சாயி அசோசியேட்ஸ் மற்றும் M/s. எஸ்.பி. அன் கோ., ஆகிய இரண்டு நிறுவனங்களின் விலைவிகித ஒப்பந்தப்புள்ளி உறை 29.01.2018 அன்று திறப்பு செய்யப்பட்டு, ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்யப்பட்டதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ. | ஒப்பந்தப்புள்ளி விகிதம் | வைப்புத்தொகை |
|---|---|---|---|---|
| 1. | M/s.ஸ்ரீ சாயி அசோசியேட்ஸ் | 2,22,67,200/- | மதிப்பீட்டு விலையை விட 5.62% அதிகம் | இணைக்கப்பட்டுள்ளது |
| 2. | M/s. எஸ்.பி. அன் கோ., | 2,27,73,990/- | மதிப்பீட்டு விலையை விட 8.02% அதிகம் | இணைக்கப்பட்டுள்ளது |

தொழில்நுட்ப தகுதி பெற்ற மேற்படி இரண்டு நிறுவனங்களின் ஒப்பந்த விகிதம் மதிப்பீட்டு விலையை விட அதிகமாக இருந்ததால், மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்திருந்த M/s. ஸ்ரீ சாயி அசோசியேட்ஸ், நிறுவனத்திடம் இவ்வலுவலக கடிதம் எண்.375/2017-18/CE (CMA), நாள்: 30.01.2018-ல் தங்களது ஒப்பந்தப்புள்ளியில் விலைக்குறைப்பு செய்து தர கோரப்பட்டது. மேற்படி நிறுவனம் 07.02.2018-ம் தேதிய கடிதத்தில் தங்களது ஒப்பந்தப்புள்ளியில் 9 இனங்களுக்கு விலைக்குறைப்பு செய்து தர சம்மதம் தெரிவித்துள்ளது. மேற்படி விலைக்குறைப்பு கடிதம் பெறப்பட்ட பின் மீண்டும் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ. | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|
| 1. | M/s. ஸ்ரீ சாயி அசோசியேட்ஸ் (விலைக்குறைப்புக்கு பின்) | 2,21,31,050/- | மதிப்பீட்டு விலையை விட 4.97% அதிகம் |

விலைக்குறைப்புக்கு பின் மதிப்பீட்டு விலையை விட 4.97% அதிகமாக இருந்த மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஏற்றுக்கொள்ளலாம் என உள்ளூர் ஒப்பந்தப்புள்ளி முடிவெடுக்கும் குழு கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளதையடுத்து, மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஏற்பது குறித்து மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**206–ன் தொடர்ச்சி**

**அலுவலகக் குறிப்பு :**

மேற்படி பணி திட்டப்பணியாக உள்ளதால் விரைவில் பணியை முடித்து முடிவறிக்கை சமர்ப்பிக்க வேண்டியுள்ளதாலும், திருப்பூர் மாநகரம் தொழில் நகரமாக உள்ளதால் திருப்பூர் மாநகரில் கட்டுமானப் பொருள்களின் விலை மற்றும் தொழிலாளர்கள் கூலி போன்றவை செந்தூரப்பட்டியல் விலை விகிதத்தை விட கூடுதலாகவும், மற்ற நகரங்களை காட்டிலும் கூடுதலாகவும் உள்ள காரணத்தாலும், கட்டிடப் பணியாக உள்ளதாலும் விலைக்குறைப்புக்கு பின் மதிப்பீட்டு விலையை விட 4.97%அதிகமாக உள்ள மேற்படி ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் ஏற்கலாம்.

– – – – –

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

– – – – –

**(ஒம்) மா.அசோகன்**
**தனி அலுவலர்**
**திருப்பூர் மாநகராட்சி**

**/ உண்மை நகல் /**

**ஆணையருக்காக,**
**திருப்பூர் மாநகராட்சி.**

## திருப்பூர் மாநகராட்சி

**2018ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் ஆம் தேதி 23 வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்கு மாநகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற மாமன்றக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்.**

**முன்னிலை : திரு மா. அசோகன் எம்.எஸ்.சி.,**
**தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர்,**
**திருப்பூர் மாநகராட்சி.**

*****

**207)** திருப்பூர் மாநகராட்சிக்கு 2015–2016 ஆம் ஆண்டு உள்கட்டமைப்பு மற்றும் இடைவெளி நிரப்புதல் மற்றும் இயக்கமும் மற்றும் பராமரிப்பு திட்டத்தில் 15–10–2015ம் தேதி நடைபெற்ற உயர்மட்ட குழு நடத்திய ஆய்வில் மோட்டார் அல்லாத போக்குவரத்து பயன்பாட்டிற்கு என ரூ.2039.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்ய தீர்மானிக்கப்பட்டது. அதில் அம்ரூத் திட்டத்தின் கீழ் 50 சதவீத தொகை ரூ.1019.50 இலட்சமும் உள்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதியின் கீழ் 49 சதவீத தொகை ரூ.1000.00 இலட்சமும், மாநகராட்சி பங்கு தொகை 1 சதவீதம் ரூ.19.50 இலட்சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மோட்டார் அல்லாத போக்குவரத்து பயன்பாட்டு பணிக்கு ரூ.10.56 கோடி தொகை 23–09–2016ம் தேதியன்று மின்னணு பரிவர்த்தனை மூலமாக திருப்பூர் மாநகராட்சிக்கு வரப்பட்டு ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா வங்கியில் வைப்புத் தொகையாக வைக்கப்பட்டுள்ளது. மோட்டார் அல்லாத போக்குவரத்து பயன்பாட்டு பணியானது தற்போது ஸ்மார்ட் சிட்டி ( Smart City ) திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட உள்ளதால் இத்தொகையினை மாநகராட்சி மூலம் புதிய திருப்பூர் பகுதி மேம்பட்டு கழகத்தினருக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டதற்கான தொகை ரூ.24.63 கோடி நிலுவை இருப்பதால் இத்தொகையினை புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டு கழகத்தினருக்கு செலுத்த அனுமதி வேண்டி அரசு செயலருக்கு நகராட்சி நிர்வாக ஆணையர் மூலம் கருத்துரு அனுப்பி வைக்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) மாமன்றம் அனுமதி வழங்கலாம். (இ.1 / 906 / 2016)

– – – – –

**தீர்மானம் : அனுமதி வழங்கப்பட்டது.**

– – – – –

**208)** திருப்பூர் மநகராட்சி எல்லைக்குள் குடிநீர் பற்றாக்குறையுள்ள இடங்களுக்கும், சத்துணவு மையங்களுக்கும், குடிசை பகுதிகளிலும் அவ்வப்போது குடிநீர் தேவைப்படும் இடங்களுக்கும் வாடகை லாரிகள் மூலம் ஒப்பந்த அடிப்படையில் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. மாநகரில் அம்ரூத் திட்டத்தின் கீழ் நடைபெற்று வரும் குடிநீர் விநியோக மேம்பாட்டு பணிகள் முடிவடையும் வரையில் லாரி மூலம் குடிநீர் விநியோகம் தேவைப்படுவதால் 01–12–2017ம் தேதி முதல் ஓராண்டு காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் வாடகை லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்ய 22–11–2017ம்தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு குறைந்த விலை ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு எம்.அப்புசாமி என்பவரின் ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக் கொள்ளப்பட்டு பணி உத்திரவு 30–11–2017ம் தேதி வழங்கப்பட்டு குடிநீர் விநியோகம் நடைபெற்று வருகிறது. எனவே 01–03–2018 முதல் 31–03–2018வரை மாநகரில் குடிநீர்விநியோகம் லாரிகள் மூலம் செய்ய ஒரு மாதகாலத்திற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.16.00 லட்சத்திற்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மாமன்றம் அனுமதி வழங்கலாம். ( இ.1 / 6112 / 2017 )

– – – – –

**தீர்மானம் : அனுமதி வழங்கப்பட்டது.**

**209)** சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி 2017–18–ன் கீழ் வார்டு எண்.55, சுண்டமேடு பகுதியில் அங்கன்வாடி கட்டிடம் கட்டுதல் பணிக்கான மதிப்பீடு ரூ.7,50,000/–க்கு தயார் செய்யப்பட்டது. மேற்படி பணிக்கு 27–09–2017 அன்று மாவட்ட ஆட்சியர் அவர்களின் நிர்வாக அனுமதி பெறப்பட்டு இரண்டாம் அழைப்பில் 21–11–2017 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டன. அதன்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ. | ஒப்பந்தப்புள்ளி விகிதம் | வைப்புத் தொகை |
|---|---|---|---|---|
| 1. | திரு ஆர்.கிருஷ்ணன் | 7,94,165/– | மதிப்பீட்டு விலையை விட 8.02% அதிகம் | இணைக்கப்பட்டு உள்ளது. |
| 2. | திரு ஆர். சிவக்குமார் | 8,36,540/– | மதிப்பீட்டு விலையை விட 13.79% அதிகம் | இணைக்கப்பட்டு உள்ளது. |

மேற்படி பணிக்கு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டு விலையை விட அதிகமாக இருந்ததால், மேற்படி 2 ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்திருந்த திரு ஆர்.கிருஷ்ணன் என்பவரிடம் இவ்வலுவலக கடிதம் எண். 108 / S / 2017–18 நாள் 01–12–2017–ல் தங்களது ஒப்பந்தப்புள்ளியில் விலைக்குறைப்பு செய்து தர கோரப்பட்டது. மேற்படி ஒப்பந்ததாரர் தனது 07–12–2017ம் தேதிய கடிதத்தில், 8 இனங்களில் விலைக்குறைப்பு செய்து தர சம்மதம் தெரிவித்துள்ளார். மேற்படி விலைக்குறைப்பு கடிதம் பெறப்பட்ட பின் மீண்டும் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ. | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|
| 1. | திரு ஆர்.கிருஷ்ணன் (விலைக்குறைப்புக்கு பின்) | 7,71,611/– | மதிப்பீட்டு விலையை விட 4.96% அதிகம் |

திட்டப் பணியாகவும், கட்டிடப் பணியாகவும் உள்ளதால், விலைக்குறைப்புக்கு பின் மதிப்பீட்டு விலையை விட 4.96% அதிகமாக இருந்த மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஏற்பது குறித்தும், கூடுதல் செலவினம் ரூ.21,611/–ஐ மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வேண்டியும், மாமன்றத்திற்கு பார்வைக்கும் முடிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1) திருப்பூர் மாநகரில் கட்டுமானப் பொருட்கள் விலை மற்றும் தொழிலாளர்கள் கூலி போன்றவை மதிப்பீட்டு விலையைவிட கூடுதலாக உள்ள காரணத்தாலும், திட்டப் பணியாகவும், கட்டிடப் பணியாகவும் உள்ளதாலும், விலைக்குறைப்புக்கு பின் விலையை விட 4.96% அதிகமாக உள்ள மேற்படி ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் ஏற்கலாம்.
2) கூடுதல் செலவினம் ரூ.21,611/–ஐ மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
3) மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்கள் ஒப்புதலுடன் பணி உத்திரவு வழங்கி நடவடிக்கை மேற்கொண்டதை அங்கீகரிக்கலாம்.

(ம.எண். 108 / S / 2017–18)

– – – – –

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

– – – – –

**210)** 14வது மத்திய நிலைக்குழு பரிந்துரைகள் திட்டம் (CFCG) – 2017 –18–ன் கீழ் ரூ.1700.00 இலட்சம் மதிப்பீட்டில் 40 பணிகள் மேற்கொள்ள மாமன்றத் தீர்மானம் எண். 156, நாள் 31–10–2017 வாயிலாக நிர்வாக அனுமதி பெறப்பட்டது. மேற்படி 40 பணிகளுக்கும் 06–12–2017 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டதில், வார்டு எண். 52, கல்லாங்காடு மெயின்ரோடு – சின்ன பழனிசாமி நகர் சந்திப்பு முதல் வள்ளலார் நகர் சந்திப்பு வரை தார்தளம் சீரமைத்தல் மற்றும் பாதாளச் சாக்கடை அமைத்தல் ( மதிப்பீட்டுத் தொகை ரூ.88,00,000/–) பணிக்கு வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் வைப்புத் தொகை இணைக்கப்படாமல் இருந்த திரு வி.பி. அழகையன் மற்றும் திருவாளர்கள் ஸ்ரீகன்ஸ்ட்ரக்சன்ஸ் ஆகிய இரண்டு ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகளும் நிராகரிக்கப்பட்டன.மீதமுள்ள ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளியான M/s. S.R.P.அன் கோ நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியில் ஒரு இனத்தில் மிக கூடுதலாக விலை குறிப்பிடப்பட்டு இருந்ததாலும், ஒரே ஒப்பந்தப்புள்ளியாக இருந்தததாலும் மறு ஒப்பந்தப்புள்ளி கோரலாம் என ஒப்பந்தப்புள்ளி முடிவெடுக்கும் குழு கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டதையடுத்து, மேற்படி பணிக்கு இரண்டாம் அழைப்பில் 19–01–2018 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டதில், வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ. | ஒப்பந்தப்புள்ளி விகிதம் | வைப்புத் தொகை |
|---|---|---|---|---|
| 1. | திரு வி.பி.அழகையன் | 79,52,729/– | மதிப்பீட்டு விலையை விட 6.39% அதிகம் | இணைக்கப்பட்டு உள்ளது. |
| 2. | திருவாளர்கள் ஸ்ரீகன்ஸ்ட்ரக்சன்ஸ் | 82,18,406/– | மதிப்பீட்டு விலையை விட 9.95% அதிகம் | இணைக்கப்பட்டு உள்ளது. |

மேற்படி பணிக்கு இரண்டாம் அழைப்பில் பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டு விலையை விட அதிகமாக இருந்ததால், மேற்படி 2 ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்திருந்த திரு வி.பி. அழகையன் என்பவரிடம் இவ்வலுவலக கடிதம் எண். 136 / S – 2017–18, நாள் 23–01–2018ல் தங்களது ஒப்பந்தப்புள்ளியில் விலைக்குறைப்பு செய்து தர கோரப்பட்டது. மேற்படி ஒப்பந்ததாரர் தங்களது 25–01–2018ம் தேதிய கடிதத்தில், இனம் எண்.1–ல் ரூ.15/–க்கு பதிலாக ரூ.10/–க்கும்.எண். 7ல் ரூ.100/–க்கு பதிலாக ரூ.80/–க்கும், இனம் எண்.12ல் ரூ.530/–க்கு பதிலாக ரூ.500/–க்கும் மற்றும் இனம் எண். 21ல் ரூ.85/–க்கு பதிலாக ரூ.75/–க்கும் விலைக்குறைப்பு செய்து தர சம்மதம் தெரிவித்துள்ளார். மேற்படி விலைக்குறைப்பு கடிதம் பெறப்பட்ட பின் மீண்டும் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ. | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|
| 1. | திரு வி.பி.அழகையன் (விலைக்குறைப்புக்கு பின்) | 78,44,745/– | மதிப்பீட்டு விலையை விட 4.95% அதிகம் |

விலைக்குறைப்புக்கு பின் மதிப்பீட்டு விலையை விட 4.95% அதிகமாக இருந்த மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஏற்றுக் கொள்ளலாம் என ஒப்பந்தப்புள்ளி முடிவெடுக்கும் குழுவால் முடிவு செய்யப்பட்டதையடுத்து, மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஏற்றுக் கொள்வது குறித்து மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

மேற்படி பணிகள் திட்டப் பணியாக உள்ளதால் விரைவில் பணியை முடித்து முடிவறிக்கை சமர்ப்பிக்க வேண்டியுள்ளதாலும், திருப்பூர் மாநகரம் தொழில் நகரமாக உள்ளதால், திருப்பூர் மாநகரில் கட்டுமானப் பொருள்களின் விலை மற்றும் தொழிலாளர்கள் கூலி போன்றவை செந்தூரப் பட்டியல் விலை விகிதத்தை விட கூடுதலாகவும், மற்ற நகரங்களை காட்டிலும் கூடுதலாகவும்

**210–ன் தொடர்ச்சி**

உள்ள காரணத்தாலும், விலைக்குறைப்பு பின் மதிப்பீட்டு விலையைவிட 4.95% அதிகமாக உள்ள மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்று, மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் ஒப்புதலுடன் பணி உத்திரவு வழங்கி நடவடிக்கை மேற்கொண்டதையும் ஏற்கலாம்.

(ம.எண். 136 / S / 2017 – 18)

– – – – –

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

– – – – –

**211)** திருப்பூர் மாநகராட்சி மண்டலம் எண்.3, வார்டு எண்.32க்கு உட்பட்ட கருமாரம்பாளையம் மாநகராட்சி நடுநிலைப் பள்ளியின் முதல் தளத்தில் இரண்டு புதிய வகுப்பறைக் கட்டிடங்கள் ரூ.13.75 இலட்சம் மதிப்பீட்டில் கட்டிக் கொடுக்க அனுமதி கோரி 30–01–2018 அன்று " திருப்பூர் Round table 116" அவர்கள் விண்ணப்பித்துள்ளனர்.

மேற்கண்ட பள்ளியின் இக்கட்டிடம் திருப்பூர் (தெற்கு) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து 2013–14 நிதியாண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டு 2015–16 நிதியாண்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

முதல்தளத்தில் கூடுதல் வகுப்பறைக் கட்டிடம் கட்ட கட்டிடத்தின் உறுதித் தன்மை தகுதி வாய்ந்த பொறியர் அவர்களின் சான்று பெறப்பட்டுள்ளது. எனவே மாநகராட்சிப் பள்ளிக் கட்டிடத்தில் " திருப்பூர் Round table 116" மூலம் கருமாரம்பாளையம் மாநகராட்சிப் பள்ளியில் முதல் தளத்தில் கூடுதல் வகுப்பைக் கட்டிடம் ரூ.13.75 இலட்சத்தில் கட்டுவதற்கு கீழ்க்கண்ட நிபந்தனைகளுடன் மாமன்றத்தில் ஒப்புதல் பெற்று அனுமதி வழங்கலாம்.

- மாநகராட்சி பொறியாளர்களின் மேற்பார்வையில் கட்டிட பணிகள் மேற்கொள்ள வேண்டும்.
- உத்தேச பள்ளிக் கட்டிடத்திற்கு தரமான பொருட்களையே கட்டுமானத்திற்கு பயன்படுத்த வேண்டும்.
- கட்டிடம் கட்டி முடிக்கப்பட்ட பிறகு தனியாளரால் கட்டப்பட்டது என விளம்பரப் பலகைகள் ஏதும் வைக்கக் கூடாது.

**அலுவலகக் குறிப்பு :**

1. நிபந்தனைகளை மேற்கோள் காட்டி அனுமதி வழங்கலாம்.

– – – – –

**தீர்மானம் : அனுமதி வழங்கப்பட்டது.**

– – – – –

**212)** திருப்பூர் மாநகராட்சி நான்கு மண்டலத்திற்குட்பட்ட பகுதியில் மாநகராட்சிக்கு சொந்தமான ஆண்டு குத்தகை இனங்கள் குத்தகை உரிமைக் காலம் 31–03–2018 உடன் முடிவடைவதால் பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரிய உயர்ந்தபட்ச ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோருபவருக்கு 01–04–2018முதல்31–03–2021 முடிய மூன்றாண்டு காலத்திற்கு உரிமையாணை ஒப்படைக்க வேண்டும்.

**வேலம்பாளையம் மண்டலம் – I – (31–03–2018ல் முடிவடையும் குத்தகை இனங்கள்)**

| | |
|---|---|
| 1. | வேலம்பாளையம் வாரச்சந்தை சுங்கம் வசூலித்தல் |
| 2. | வேலம்பாளையம் ஏ.வி.பி. ரோடு பாரதியார் வணிக வளாக கட்டணக் கழிப்பிடம் கட்டணம் வசூலித்தல் |
| 3. | அனுப்பர்பாளையத்தில் உள்ள வணிக வளாக கட்டணக் கழிப்பிடம் கட்டணம் வசூலித்தல் |
| 4. | எஸ்.வி.காலனி கட்டணம் கழிப்பிடம் கட்டணம் வசூலித்தல் |
| 5. | அனுப்பர்பாளையம் பு தூர் பகுதியில் உள்ள கட்டண கழிப்பிடம் கட்டணம் வசூலித்தல் |

**212–ன் தொடர்ச்சி**

**01–04–2015 முதல் ஏலம் கோரப்பட்டு வரும் குத்தகை இனங்கள்**

| | |
|---|---|
| 6. | வேலம்பாளையம் அரசு மருத்துவமனை அருகிலுள்ள கழிப்பிடம் கட்டணம் வசூலித்தல் |
| 7. | அனுப்பர்பாளையம் மாரியம்மன் கோயில் அருகிலுள்ள கழிப்பிடம் கட்டணம் வசூலித்தல் |
| 8. | அனுப்பர்பாளையம் சத்யா நகர் கழிப்பிடம் கட்டணம் வசூலித்தல் |

**தொட்டிபாளையம் – மண்டலம் – II – (31–03–2018ல் முடிவடையும் குத்தகை இனங்கள்)**

| | |
|---|---|
| 1. | புதிய பேருந்து நிலையம் பொருள் பாதுகாப்பு அறை கட்டணம் வசூலித்தல் |
| 2. | புதிய பேருந்து நிலையம் டி.வி. விளம்பர அறை |
| 3. | முத்துப்பு தூர் ராமகிருஷ்ணா ஸ்கூல் பின்புறம் உள்ள கட்டண கழிப்பிடம் கட்டணம் வசூலித்தல் |
| 4. | பஜனைக் கோவில் வீதி கட்டண கழிப்பிடம் கட்டணம் வசூலித்தல் |
| 5. | புதிய பேருந்து நிலைய கழிப்பிடம் கட்டணம் வசூலித்தல் ( மதுரை, தேனி பஸ் ஸ்டாப் அருகில் உள்ள கழிப்பிடம் – பொது கழிப்பிடம் ) |

**நல்லூர் மண்டலம் – III – (31–03–2018ல் முடிவடையும் குத்தகை இனங்கள்)**

| | |
|---|---|
| 1. | ஈஸ்வரன் கோவில் வீதியில் உள்ள பூமார்க்கெட் சுங்க கட்டணம் வசூலித்தல் |
| 2. | பழைய பேருந்து நிலையம் சுங்கம் வசூலித்தல் |
| 3. | பழைய பேருந்து நிலையம் NTADCL கட்டண கழிப்பிடம் கட்டணம் வசூலித்தல் |
| 4. | ஈஸ்வரன் கோவில் வீதியில் உள்ள பூமார்க்கெட் கட்டண கழிப்பிடம் கட்டணம் வசூலித்தல் |

**01–04–2015 முதல் ஏலம் கோரப்பட்டு வரும் குத்தகை இனங்கள்**

| | |
|---|---|
| 5. | பழைய பேருந்து நிலைய வண்ண தொலைக்காட்சி பெட்டி வைத்து விளம்பரம் செய்தல் |
| 6. | பழைய பேருந்து நிலைய வளாகத்தில் புதியதாக கட்டப்பட்டுள்ள கட்டிடத்தில் இரு சக்கர வாகனம் நிறுத்த கட்டணம் வசூலிக்கும் உரிமம் |
| 7. | நொய்யல் வீதி கழிப்பிடம் கட்டணம் வசூலித்தல் |
| 8. | பூலவாரி சுகுமார் நகர் மாரியம்மன் கோவில் அருகில் உள்ள கழிப்பிடம் கட்டணம் வசூலித்தல் |

**முருகம்பாளையம் மண்டலம் – IV – (31–03–2018ல் முடிவடையும் குத்தகை இனங்கள்)**

| | |
|---|---|
| 1. | மாநகராட்சி வெள்ளிவிழா நினைவு பூங்கா நுழைவு கட்டணம் வசூலித்தல்<br>1) ரெஸ்டாரெண்ட்<br>2) ஐஸ்கீரீம் பார்<br>3) இருசக்கர வாகனம் நிறுத்தும் இடம் |
| 2. | தெற்குத்தே தாட்டம் ஜீவா நகர் கட்டண கழிப்பிடம் கட்டணம் வசூலித்தல் |
| 3. | ஏ.பி.டி ரோடு கழிப்பிடம் கட்டணம் வசூலித்தல் |
| 4. | இந்திரா நகர் கல்லம்பாயைம் குடியிருப்பு அருகில் உள்ள கழிப்பிடம் கட்டணம் வசூலித்தல் |

**212–ன் தொடர்ச்சி**

**01–04–2015 முதல் ஏலம் கோரப்பட்டு வரும் குத்தகை இனங்கள்**

| | |
|---|---|
| 5 | வாரசந்தைப்பேட்டையில் உள்ள பழைய / புதிய கழிப்பிடம் மற்றும் குளியல் அறை கட்டணம் வசூலிக்கும் உரிமம் |
| 6. | பட்டுக்கோட்டையார் நகர் அருகில் உள்ள கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம். |
| 7. | பட்டுக்கோட்டையார் நகர் மாநகராட்சி குடியிருப்பு அருகில் உள்ள கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம். |
| 8. | பட்டுக்கோட்டையார் நகர் மாரியம்மன் கோவில் அருகில் உள்ள கழிப்பிடம் கட்டணம் வசூலித்தல் |

1)அதன்படி, மேற்காணும் 29 குத்தகை இனங்களை 01–04–2018 முதல் 31–03–2021 முடிய மூன்றாண்டு காலத்திற்கு உரிமையாணை ஒப்படைக்க வேண்டி பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோர தனிஅலுவலர் அவர்களின் ஒப்புதலை எதிர்நோக்கி மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அதன்படி மேற்காணும் குத்தகை இனங்களுக்கு ஏல நிபந்தனைகள் விதிகளை புத்தகமாக 200 எண்ணிக்கை அச்சிட ஈரோடு மாவட்ட பெண்கள் கூட்டுறவு அச்சகத்தில் அச்சிடவும் மேற்காணும் குத்தகை இனங்களை ஏலம் / ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை செய்தி நாளிதழ்களில் விளம்பரம் செய்திடவும், அதற்குரிய உத்தேச செலவினம் ரூ.2.00 (இலட்சம்)த்திற்கும் மாமன்றம் அனுமதி வேண்டப்படுகிறது..

**அலுவலக குறிப்பு :**

அனுமதி வழங்கலாம். மேலும் பொது ஏலம் விளம்பர அறிவிப்பினை செய்தி நாளிதழ்களில் விளம்பரம் செய்ய உத்தேச செலவினம் ரூ.2.00 இலட்சத்திற்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். அ.1 / 843 / 018)

– – – – –

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

**– – – – –**

**213)** திருப்பூர் மாநகராட்சியில் பொது நிதி (2017–18)–ன் கீழ் வார்டு எண்.11, சாமிநாதபுரம் 2வது வீதியில் புதிதாக தார்தளம் அமைத்தல் பணிக்கான மதிப்பீடு ரூ.13,50,000/–க்கு தயார் செய்யப்பட்டது. மேற்படி பணிக்கு மாமன்றத் தீர்மானம் எண். 179, நாள் 22.12.2017 அன்று நிர்வாக அனுமதி பெறப்பட்டது.மேற்படி பணிக்கு 30–01–2018 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டன. அதன்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ. | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் | வைப்புத் தொகை |
|---|---|---|---|---|
| 1. | திரு V. அருணாசலம் | 11,69,474.00 | மதிப்பீட்டு விலையை விட 0.18% குறைவு | இணைக்கப்பட்டு உள்ளது. |
| 2. | திருவாளர்கள்ஸ்ரீ சாயி அசோசியேட்ஸ் | 11,83,810.00 | மதிப்பீட்டு விலையை விட 1.05% அதிகம் | இணைக்கப்பட்டு உள்ளது. |

மேற்படி பணிக்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்பந்ததாரர் திரு V. அருணாசலம் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு விலையைவிட 0.18 சதவிகிதம் குறைவாக உள்ளதால் மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி பரிசீலனைக்குழு கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளதையடுத்து, மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஏற்பது குறித்து மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>213–ன் தொடர்ச்சி</u>

**அலுவலகக் குறிப்பு :**

1) மதிப்பீட்டு விலையை விட 0.18 சதவிகிதம் குறைவாக வரப்பெற்ற மேற்படி ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் ஏற்கலாம். ( ம.எண். 173 / N / 2017–18 )

– – – –

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

– – – – –

**214**) திருப்பூர் மாநகராட்சி மண்டலம் எண்.2, வார்டு எண்.25, பெருமாநல்லூர் ரோடு, மேட்டுப்பாளையம் பகுதியில் முனீஸ்வரன் கோவில் அருகில் உள்ள நகரளவு எண்.5, பிளாக் எண்.13, வார்டு "J"ல் உள்ள 313.7 ச.அடி நிலம் உள்ளது. இந்த நிலத்தில் வடபுறத்தில் பழைய விநாயகர் கோவில் உள்ளது. இந்த கோயில் பழுதடைந்த நிலையில் உள்ளது. இந்த இடத்தின் F2-F2 40 அடி அகல திட்ட சாலை அமைப்பதற்கு மாமன்றத் தீர்மானம் எண்.194, நாள் 09–08–2016–ல் ஒப்புதல் பெறப்பட்டு மாநகராட்சிக்கு ஒப்படை செய்ய முன்மொழிவுகள் உதவி ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை கோவை அவர்களுக்கு முன்மொழிவுகள் அனுப்பப்பட்டது. அதன் அடிப்படையில் இணை ஆணையர், கோவை அவர்களின் ந.க.எண்.10205/2017/அ.4, நாள் 09–11–2017 தேதியிட்ட கடிதத்தில் மாநகராட்சி திட்ட சாலை அமைக்கக் கோரும் 313.7 ச.அடிக்கு மாற்றாக மாநகராட்சி பராமரிப்பில் உள்ள வருவாய் துறைக்கு சொந்தமான நகரளவு எண். 28–ல் 981.8 ச.அடி நிலத்தினை நில உரிமை மாற்றம் செய்து கொடுக்கக் கோரியுள்ளார்.

இந்த இடம் முக்கிய இணைப்புச் சாலையாக இருப்பதாலும், இந்து சமய அறநிலையத்துறை கோரும் இடம் மாநகராட்சி பராமரிப்பில் உள்ள சாலையின் ஒரு பகுதியாக உள்ளது மற்றும் மழைநீர் வடிகால் அமைந்துள்ள இடத்திற்கு மேற்கில் அமைவதாலும் 981. 8 ச.அடி நிலத்தினை இந்து சமய அறநிலையத்துறை, கோவை அவர்களுக்கு நில உரிமை மாற்றம் செய்ய ஏதுவாக மாவட்ட ஆட்சியர், திருப்பூர் அவர்களுக்கு முன்மொழிவுகள் அனுப்ப மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** ஒப்புதல் வழங்கலாம். ( இ.1 / 175 / 2016 / ம.2)

–––––

**தீர்மானம் : ஒப்புதல் வழங்கப்பட்டது.**

– – – – –

**215)** திருப்பூர் மாநகராட்சி, நகராட்சியாக இருந்த பொழுது பாதாள சாக்கடை திட்டம் 2009ம் ஆண்டு புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டு கழகத்தினரால் செயல்படுத்தப்பட்டது. மாநகரில் 19 வார்டு பகுதிகளில் மட்டும் செயல்படுத்தப்பட்டுள்ளது. மாநகராட்சி 25.10.2011 முதல் 2 மூன்றாம் நிலை நகராட்சிகள் மற்றும் 8 ஊராட்சி பகுதிகளுடன் இணைக்கப்பட்டு விரிவாக்கம் செய்யப்பட்ட மாநகராட்சியாக செயல்பட்டு வருகிறது. மாநகராட்சி நிலவடிவமைப்பிற்கு ஏற்ப 17 பாதாள சாக்கடை கழிவுநீர் மண்டலங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே மாநகரின் மைய பகுதிகளில் 4 மண்டலங்களில் பாதாள சாக்கடை திட்டம் செயல்பாட்டில் உள்ளது. தற்போது அம்ரூத் திட்ட வழிகாட்டுதலின்படி மக்கள் நெருக்கம் மிகுந்த 10 கழிவுநீர் மண்டல பகுதிகளில் பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்த விரிவான திட்ட அறிக்கை ரூ.525.00 கோடி மதிப்பீட்டில் தயார் செய்யப்பட்டுள்ளது.

**<u>215–ன் தொடர்ச்சி</u>**

பாதாள சாக்கடை திட்டத்தில் 11 இடங்களில் கழிவுநீர் நீரேற்று நிலையங்கள் அமைய உள்ளன. இதில் 10 இடங்கள் மாநகராட்சி மற்றும் அரசுக்கு சொந்தமான இடங்களாக உள்ளன. மண்டல எண்.13ல் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க மண்ணரை கிராமம் சர்வே எண். 35/1ல் உத்தேசமாக 13,920 சதுரடி நிலப்பரப்பினை தனியாரிடமிருந்து மாவட்ட ஆட்சித் தலைவர் நிர்ணயிக்கும் விலைக்கு வாங்க வேண்டியுள்ளது. இதற்கான உத்தேச செலவினம் ரூ.160.00 இலட்சமாகும். மாநகராட்சியில் போதிய நிதி வசதி இல்லாத காரணத்தினால் அரசின் உள்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதியிலிருந்து மான்யமாக வழங்கக் கோரியும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நிர்ணயிக்கும் விலைக்கு வாங்க அனுமதி வேண்டியும், நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு கருத்துரு அனுப்ப மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அனுமதி வழங்கலாம். ( இ.1 / 0657 / 2018 )

-----

**தீர்மானம் : அனுமதி வழங்கப்பட்டது.**

- - - - -

(ஒம்) மா.அசோகன்
தனி அலுவலர்
திருப்பூர் மாநகராட்சி

/ உண்மை நகல் /

ஆணையருக்காக,
திருப்பூர் மாநகராட்சி.